# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 351 | 4 Pages | 13.7.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 351 | 4 பக்கங்கள் | 13.7.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ஆஸ்திரியாவா, ஆஸ்திரேலியாவா?: கன்பியூஸ் ஆன பிரதமர் மோடி

புதுடெல்லி, ஜூலை 13

பிரதமர் நரேந்திர மோடி ரஷியா மற்றும் ஆஸ்திரியா பயணத்தை முடித்துக் கொண்டு இன்று காலை டெல்லி திரும்பினார்.

ஆஸ்திரிய பயணம் தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் வலைதள செய்தியில், இந்தப் பயணம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. நமது தேசங்களுக்கு இடையிலான நட்புறவு தழைத்துள்ளது. வியன்னாவில் பல் வேறுநிகழ்ச்சிகளில் கலந்துகொண்டது மகிழ்ச்சி. சிறப்பாக உபசரித்த ஆஸ்திரிய அரசு, அதிபர் கார்ல் நஹமர் மற்றும் மக்களுக்கு நன்றி என பதிவிட்டிருந்தார்.



சுமார் 40 ஆண்டுக்குப் பிறகு இந்திய பிரதமர் ஒருவர் ஆஸ்திரியா சென்றது இது முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஆஸ்திரியாவில் இந்திய சமூகத்தினர் இடையே பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது ஆஸ்திரியா என்பதை தவறுதலாக ஆஸ்திரேலியா என உச்சரித்தார். இதைக்கேட்ட அங்கிருந்த கூட்டத்தினர், ஆஸ்திரியா என திருத்திக் கூச்சலிட்டனர்.

இதுதொடர்பான வீடியோவை இணைய தளங்களில் வைரலாக்கி வரும் இணையதள வாசிகள், அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு சரியான கம்பெனி கிடைத்து விட்டது என டிரோல் செய்து வருகின்றனர்.

## சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி ஆர்.மகாதேவன் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்க பரிந்துரை



சென்னை, ஜூலை 13

சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி ஆர்.மகாதேவனை உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்க கொலிஜியம் பரிந்துரை செய்துள்ளது.

கடந்த மே மாதம் 23 ஆம் தேதி சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியான எஸ்.வி.கங்காபூர்வாலா ஓய்வு பெற்றார். இதையடுத்து சென்னை உயர் நீதிமன்ற மூத்த நீதிபதியாக இருந்த ஆர். மகாதேவனை பொறுப்பு தலைமை நீதிபதியாக நியமிக்க ஜனாதிபதி திரவுபதி முர்மு உத்தரவிட்டார். அதன்படி கடந்த மே 24 இல் சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக பதவியேற்றார்.

இந்த நிலையில், தற்போது உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக இருக்கும் ஆர். மகாதேவனை உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்ய கொலிஜியம் பரிந்துரை செய்துள்ளது.

இதேபோல், ஜம்மு காஷ்மீர் தலைமை நீதிபதி கோட்டீஸ்வர்சிங்கையும் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்க கொலிஜியம் பரிந்துரை செய்துள்ளது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான கொலிஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## நிலுவையில் உள்ள கோரிக்கைகளை வலியுறுத்தி மீண்டும் போராட்டம்: விவசாய சங்கம் அறிவிப்பு




டெல்லி, ஜூலை 13

சட்டப்பூர்வமான எம்எஸ்பி (legal guarantee to MSP), விவசாயிகளின் கடன் தள்ளுபடி உள்ளிட்ட நிலுவையில் உள்ள கோரிக்கைகளை வலியுறுத்தி மீண்டும் போராட்டம் நடத்தப்படும் என விவசாய சங்கமான சம்யுக்த் கிஷான் மோர்ச்சா (SKM) தெரிவித்துள்ளது.

பிரதமர் மோடி மற்றும் எதிர்க்கட்சி தலைவரான ராகுல் காந்தி ஆகியோரை சந்திக்க நேரம் கேட்கப்படும். மற்றும் பாராளுமன்ற இரு அவைகளின் எம்.பி.க்கள் ஆகியோருக்கு விவசாயிகள் போராட்டம் குறித்த குறிப்பாணை வழங்கப்படும்.

2020, 2021ல் டெல்லி பஞ்சாப் டெல்லி அரியானா மாநிலங்களில் போராட்டம் நடைபெற்றது. அதன்பின் டெல்லி நோக்கி டிராக்டர் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த முறை மாநிலம் தழுவிய போராட்டம் குறித்து கவனம் செலுத்தி வருகிறோம். குறிப்பாக சட்டமன்ற தேர்தல் நடைபெறும் மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், ஜம்முகாஷ்மீர், அரியானா மாநிலங்களில் கவனம் செலுத்துவோம்.

எல்லா நேரங்களிலும் ஒரே மாதிரியான போராட்ட முறையை பயன்படுத்தமாட்டோம். நாடு தழுவிய அளவில் போராட்டம் நடத்துவோம்.

விவசாயிகள் போராட்டத்தால் மக்களவை தேர்தலில் ஆதிக்கமான 159 புறநகர் தொகுதிகளில் பாஜக தோல்வியை சந்திக்க நேரிட்டது என எஸ்கேஎம் தலைவர்கள் தெரிவித்தனர்.

ஆகஸ்ட் 9ந்தேதி வெள்ளையனே வெளியேறு என்பதை போன்று கார்பரேட்கள் வெளியேறு அனுசரிக்கப்படும்.

உலக வர்த்தக அமைப்பில் (WTO) இருந்து இந்தியா வெளியேற வேண்டும், மேலும் பன்னாட்டு நிறுவனங்களை விவசாயத் துறையில் நுழைய அனுமதிக்கக்கூடாது என்பது அவர்களின் முக்கிய கோரிக்கைகளில் அடங்கும்.

# தமிழகத்துக்கு நிதி ஒதுக்க மத்திய அரசுக்கு மனம் இல்லை: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

தர்மபுரி, ஜூலை 13

தருமபுரி மாவட்டம், பாளையம் புதூர் ஊராட்சி, பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ஊரகப் பகுதிகளில் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தை தொடங்கி வைத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று மக்களை நான் நேரடியாக சந்தித்தேன். அந்த நிகழ்ச்சிக்கு 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' என்று பெயர் வைத்தோம். கொளத்தூர் மட்டுமல்ல, அதாவது என்னுடைய தொகுதி கொளத்தூர் மட்டுமல்ல. தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து தொகுதிகளும் என்னுடைய தொகுதிகள் தான் என்ற எண்ணத்துடன் அந்த பயணத்தை தொடங்கினேன். மேடையில் எனக்கு அருகில் ஒரு பெரிய பெட்டி வைத்து, அதில், பொதுமக்கள் தங்களுடைய தொகுதிக்கான தேவைகளை, கோரிக்கைகளை எழுதி போட வைத்தோம்.

ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள் அதில் சாத்தியமாக இருக்கக்கூடிய அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி காட்டுவேன் என்று சொன்னேன்.

ஆட்சிக்கு வந்ததும், உங்களுடைய மனுக்களை கவனிப்பதற்காகவே புதியதாக ஒரு துறையை உருவாக்கினேன். அந்த துறையின் பெயர் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்னிடம் கொடுக்கப்பட்ட மனுக்களை துறைவாரியாக பிரித்தோம். அதிலிருந்து, நடைமுறை சாத்தியம் உள்ள 2 லட்சத்து 29 ஆயிரத்து 216 மனுக்களுக்கு உடனடியாக தீர்வு கண்டோம். மக்கள் வைத்த கோரிக்கைகளில் சாத்தியம் உள்ள அனைத்தையும் நிறைவேற்றி இருக்கிறோம். தேர்தலுக்கு முன்னால் பெறப்பட்ட மனுக்களுக்கு தீர்வு கண்டவுடன், எங்களுடைய கடமை முடிந்துவிட்டது என்று நாங்கள் நினைக்கவில்லை. இனி மேல்தான், கடமை தொடங்குகிறது என்று நினைத்து, உழைப்பைக் கொடுத்தோம். அதனால்தான், தொடர்ந்து மனுக்களை பெற்றோம். அதை முறைப்படுத்தினோம். எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து, "முதல்வரின் முகவரி" என்று புதியதாக ஒரு துறையை உருவாக்கினோம்.




மக்களால் தரப்படும் எல்லா மனுக்களையும் ஒரு குடையின்கீழ் கொண்டு வந்தோம். அனைத்து மக்களின் கோரிக்கைகளும் தலைமைச் செயலகத்திற்கு வந்துவிடுகிறது.

நான் முதலமைச்சராக பொறுப்பேற்றது முதல், முதல்வரின் முகவரி துறையின்கீழ் தற்போது வரைக்கும் பெறப்பட்ட, 68 லட்சத்து 30 ஆயிரத்து 281 மனுக்களில் 66 லட்சத்து 25 ஆயிரத்து 304 மனுக்களுக்கு உரிய முறையில் தீர்வு கண்டிருக்கிறோம். அதிலும், இந்த தருமபுரி மாவட்டத்தில் மட்டும், 72 ஆயிரத்து 438 மனுக்களுக்கு சாதகமான முறையில் தீர்வு அளிக்கப்பட்டிருக்கிறது.

30 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் உருவானதுதான் இந்த மக்களுடன் முதல்வர் திட்டம்.

முதற்கட்டமாக, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகர்ப்புறங்களை ஒட்டியிருக்கும் கிராம ஊராட்சிகளில் இந்த முகாம்கள் நடத்தப்பட்டது. இந்த முகாம்கள் வாயிலாகப் பெறப்பட்ட சுமார் 8 லட்சத்து 74 ஆயிரம் மனுக்களுக்கு இதுவரைக்கும் தீர்வு கண்டிருக்கிறோம். இந்த தருமபுரி மாவட்டத்தில் நகரப் பகுதிகளில், 3 ஆயிரத்து 107 மனுக்கள் பெறப்பட்டு, 30 நாட்களில் 1,868 மனுக்களுக்கு சாதகமான முறையில் தீர்வு அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் மக்களுக்கானதிட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

எடுத்துக்காட்டாக, உங்களிடம் ஒன்றிரண்டு கடிதத்தைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பூரணி என்பவர், தன்னுடைய வீட்டு வாசல் முன்பு கழிவுநீர் தேங்குவது தொடர்பாக எழுதியிருந்த மனுவுக்கு, 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தில் தீர்வு கண்டோம். அதற்கு நன்றி தெரிவித்து அவர்கள் எழுதிய கடிதத்தில், என்ன சொல்லியிருந்தார்கள் என்றால், இதய நோயாளியான அவர்களுக்கு தேவையான மருந்துகள், அரசு மருத்துவமனையிலேயே கிடைத்துவிடுவதாகவும், ஆனால், ஒரே ஒரு மாத்திரையை மட்டும் வெளியே வாங்க வேண்டிய நிலை இருப்பதாகவும் சொல்லியிருந்தார். அந்த மாத்திரையின் விலை, ஒரு அட்டை 215 ரூபாய். ஒரு நாளைக்கு இரண்டு மாத்திரை என்று, ஒரு மாதத்திற்கு 60 மாத்திரை சாப்பிடவேண்டும். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் கொடுக்கும் ஆயிரம் ரூபாய் இதற்கு மிகவும் உதவியாக இருப்பதாகவும், கடந்த எட்டு மாதமாக, இந்தத் தொகையில்தான் மருந்து வாங்குவதாகவும் அந்தக் கடிதத்தில் அவர் சொல்லியிருந்தார்.

அடுத்து, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த ஜீனி வேதமுத்து என்பவர் எழுதிய கடிதத்தில், கடந்த இருபது ஆண்டுகளாக செப்பனிடப்படாமல் இருந்த கைலாசபுரம் செட்டியூரனி சாலையை சீரமைத்து கொடுத்ததற்கு நன்றி சொல்லியிருந்தார்.

பொதுமக்களின் தனிப்பட்ட கோரிக்கைகளையும் கேட்டு, செயல்படுத்தி கொடுப்பது மூலமாக, எல்லோரும் மனநிறைவு அடையும் ஆட்சியாக நம்முடைய கழக அரசு செயல்பட்டு வருகிறது. பல்வேறு நலத்திட்டங்கள் மூலமாக ஒவ்வொரு வீட்டிற்கும், ஏதாவது ஒரு பயன்கிடைக்க அதில் அவர்கள் பயனடைந்து கொண்டு வருகிறார்கள். அதேபோன்று 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தின் மூலமாக 'யாருக்கும் எந்தக் குறையும் இல்லை' என்ற நிலையை உருவாக்க நாங்கள் இப்போது பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

இப்படி மக்களுக்காக செயல்படுவது எதிர்க்கட்சிகளுக்கு பொறாமையையும், எரிச்சலையும் ஏற்படுத்துகிறது. அதனால்தான், அவதூறுகள் பொய்ப் பிரச்சாரங்கள் மூலமாக இந்த ஆட்சிக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த நினைக்கிறார்கள். வாக்களித்தவர்கள், வாக்களிக்க மறந்தவர்கள் என்ற எந்த வேறுபாடும் பார்க்காமல் அனைத்து மக்களுக்குமான அரசாக நாம் செயல்பட்டு வருகிறோம். ஆனால், இதே பெருந்தன்மையை மற்றவர்களிடம் பார்க்க முடியவில்லை. தமிழ்நாட்டில் தொடர் தோல்வி, படுதோல்வி அடைந்த பிறகும் அதிலிருந்து மத்திய அரசு இன்னும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. தமிழ்நாட்டின் முக்கிய கோரிக்கையாக இருக்கும் மெட்ரோ ரெயில் போன்ற திட்டங்களுக்கு கூட நிதி ஒதுக்க மத்திய அரசுக்கு மனமில்லை. நல்ல குணமில்லை. பாடம்கற்றுக்கொள்வதற்குநினைப்பும் இல்லை. தங்களின் பத்து வருட காலத்தில் தமிழ்நாட்டில் எந்த ஒரு பெரிய திட்டமும் செய்யவில்லை.

ஒன்றிய அரசு என்பது, விருப்பு வெறுப்புகளைக் கடந்து, அனைத்து மக்களுக்குமான பொதுவான அரசாக செயல்பட வேண்டும் என்பதை இனியாவது அவர்கள் உணர வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்

தி.மு.க.வைப் பொருத்தவரைக்கும் நாங்கள் மக்களுடன் இருக்கிறோம். மக்களாகிய நீங்கள் எங்களுடன் இருக்கின்றீர்கள். இதுதான் எங்களுடைய வெற்றியின் ரகசியம். இதுதான் தமிழ்நாட்டின் வளர்ச்சியின் ரகசியம். மக்களுக்கு உண்மையாக இருந்து, உண்மையான வளர்ச்சியை உருவாக்குவோம். இந்தியாவின் முதன்மை மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாட்டை உன்னதமான சிறந்த மாநிலமாக உருவாக்கிக் காட்டுவோம்,

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

## பட்டியல் இன தலைவர்களுக்கு துப்பாக்கி உரிமமும் துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்களும் பாதுகாப்பும் வழங்க கோரி புரட்சி பாரதம் கட்சி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



விழுப்புரம், ஜூலை 13

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் நகர பகுதியில் இன்று புரட்சி பாரதம் கட்சியின் சார்பில் பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் திரு K.ஆம்ஸ்ட்ராங் அவர்களை படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து இன்று 11.07.2024 மாலை 5 மணி அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் அண்ணன் K.ஆம்ஸ்ட்ராங் அவர்களை படுகொலை செய்த உண்மை குற்றவாளிகளை விசாரித்து கைது செய்ய சிபிஐ க்கு வழக்கை மாற்றக்கோரியும் உண்மை குற்றவாளிகளை கண்டறிந்து அவர்களை தூக்கிலிட கோரியும் பட்டியல் இன தலைவர் மற்றும் அனைத்து சமூக தலைவர்களுக்கும் துப்பாக்கி உரிமமும் வழங்கியும் மற்றும் துப்பாக்கி ஏந்திய 24 மணி நேர காவலர்களும் சுழற்சி முறையில் பணியில் அமர்த்த வேண்டும் என்றும் தமிழகத்தில் தொடரும் கள்ளச்சாராயம் மரணம் கஞ்சா போதைகளால் கற்பழிப்பு படுகொலைகளை தமிழக அரசு இரும்பு கரம் கொண்டு அடக்க வேண்டும் இன்று புரட்சி பாரதம் கட்சி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் திறளானோர் கலந்து கோண்டனர்.



குன்னூர் அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளியில் மனிதனை நேசிப்போம் அறக்கட்டளை சார்பில் போதை விழிப்புணர்வு மற்றும் சாலை பாதுகாப்பு நிகழ்ச்சி குன்னூர் காவல் உதவி ஆய்வாளர் குணா மற்றும் பிரேமா ஆகியோர் தலைமையில் நடைப்பெற்றது இதில் அன்பு அறக்கட்டளை நிறுவனர் உலிக்கல் சண்முகம்,அன்பு அறக்கட்டளை நிறுவனர் சதீஷ்,பேரிடர் ஒருங்கிணைப்பாளர் சிவக்குமார் மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர்,ஆசிரியைகள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாட்டினை மனிதனை நேசிப்போம் அறக்கட்டளை நிறுவனர் பாரூக் செய்திருந்தார்.

# இனி கட்டிட நிறைவு சான்றிதழ் இல்லாமல் மின் இணைப்பு பெறலாம்... புதிய விதிமுறைகள் அமலுக்கு வந்தது



சென்னை, ஜூலை 13
தமிழகத்தில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு, கட்டிட நிறைவு சான்றிதழ் பெற வேண்டுமென்றால், வரைபடத்தில் உள்ள அளவில்தான் கட்டிடம் கட்டி இருக்க வேண்டும். அதில் விதிமீறல்கள் இருந்தால் பணி நிறைவு சான்றிதழ் வழங்கப்படாது. எனவே கட்டிடம் கட்டுபவர்கள் விதிகளை கடைபிடித்து வந்தனர். ஆனால் அதே வேளையில் இந்த சான்றிதழ் பெறுவதில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படுவதாக பல்வேறு தரப்பில் இருந்தும் புகார்கள் எழுந்தன.

எனவே தமிழக அரசு, குறிப்பிட்ட சில அளவுள்ள கட்டிடங்களுக்கு இனி பணி நிறைவு சான்றிதழ் வேண்டாம் என்று அறிவித்துள்ளது. அதன்படி 14 மீட்டர் (46 அடி) உயரம் மிகாமல் உள்ள 8 குடியிருப்பு அலகுகள் கொண்ட குடியிருப்பு கட்டிடங்கள், 750 சதுர மீட்டர் (8,073 சதுரடி) பரப்பளவிற்கு உட்பட்ட வீடு, 14 மீட்டர் (46 அடி) உயரம் மிகாமல் 300 சதுர மீட்டர் (3,230 சதுரடி) கட்டிட பரப்பளவிற்கு உட்பட்ட வணிக கட்டிடங்கள் மற்றும் அனைத்து தொழிற்சாலை கட்டிடங்களுக்கும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மின்சார வாரியமும் அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னர் வணிக கட்டிடங்கள் எந்த அளவாக இருந்தாலும் கட்டிட பணி நிறைவு சான்றிதழ் கட்டாயம் இருந்தால்தான் மின் இணைப்பு வழங்கப்படும் என்ற நிலை தற்போது தளர்த்தப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த நடவடிக்கைக்கு ஒருபுறம் வரவேற்பு இருந்தாலும், சிலர் இதற்கு எதிராக குரல் கொடுக்கின்றனர்.

ஏனென்றால் கட்டிடம் கட்டுபவர்கள் விதிகளை மீறினால் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. கட்டிட நிறைவு சான்றிதழ் வழங்கினால்தான் மின் இணைப்பு என்ற சூழ்நிலை இருந்ததால் விதிகளை மீறுவதற்கு அச்சப்பட்டனர்.

ஆனால் இப்போது அதிலும் விதி விலக்கு வழங்கி இருப்பதால் விதிமீறல் கட்டிடங்கள் அதிகரிக்கும் என்று கூறுகின்றனர்.

# ரூ.2½ கோடி சொத்துக்கு ரூ.2 லட்சம் லஞ்சம் வாங்கிய பெண் தாசில்தார் கைது



ஊட்டி, ஜூலை 13
நீலகிரி மாவட்டம் கூடலூரில் உள்ள தோட்டமூலா பகுதியை சேர்ந்தவர் உம்மு சல்மா(வயது 34). பட்டதாரி. இவரது குடும்பத்தினருக்கு சொந்தமாக 3.27 ஏக்கர் நிலம் உள்ளது.இந்த நிலையில் கடந்த 2015ம் ஆண்டு உம்மு சல்மாவின் தாயார் இறந்து விட்டார். கடந்த ஆண்டு அவரது தந்தை மற்றும் சகோதரர் இறந்து விட்டனர். இதனால் சொத்தில் தந்தையின் பங்காக 36 சென்ட் நிலம் உம்மு சல்மாவுக்கு ஒதுக்கப்பட்டது. மேலும் அவரது பெரியப்பா வகையில் 6 சென்ட் நிலம் எழுதி கொடுக்கப்பட்டது.அதன்படி மொத்தம் 42 சென்ட் நிலத்தை எல்லை வரையறை செய்வதற்காககடந்த17.9.2023 அன்று கூடலூர் தாசில்தார் ராஜஸ்வரியிடம், உம்மு சல்மா விண்ணப்பித்தார். அதற்கு ரூ.820 கட்டணமும் செலுத்தினார்.


அதன் பின்னரும் உரிய நடவடிக்கை எடுக்காததால் 4.3.2024 அன்று ஐகோர்ட்டில் உம்மு சல்மா வழக்கு தொடர்ந்தார். இதை விசாரித்த ஐகோர்ட்டு, 4வது பிரதிவாதியாக கூடலூர் தாசில்தாரை நியமித்து உடனடியாக நில அளவீடு செய்து எல்லை வரையறை செய்யும்படி உத்தரவிட்டது. இதைத்தொடர்ந்து தாசில்தார் ராஜேஸ்வரியை, உம்மு சல்மா அணுகினார். ஆனால் ஐகோர்ட்டு உத்தரவை பின்பற்றாமல் உம்மு சல்மாவிடம் தாசில்தார் ராஜேஸ்வரி ரூ.2 லட்சம் லஞ்சம் கேட்டார். அதை கொடுக்காததால் அவரை அலைக்கழித்ததாக தெரிகிறது. இறுதியாக ரூ.50 ஆயிரம் லஞ்சம் தரும்படி தாசில்தார் ராஜேஸ்வரி கேட்டார். எனினும்லஞ்சம்கொடுக்க மனம் இல்லாத உம்மு சல்மா, லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் அளித்தார். இதனால் தாசில்தார் ராஜேஸ்வரியை கையும், களவுமாக பிடிக்க லஞ்ச ஒழிப்பு போலீசார் திட்டமிட்டனர்.

அதன்படி நேற்று இரவு உம்மு சல்மாவிடம் ரசாயனம் தடவிய ரூ.20 ஆயிரத்தை கொடுத்து கூடலூர் தாலுகா அலுவலகத்தில் தாசில்தார் ராஜேஸ்வரியை சந்தித்து கொடுக்க கூறினர். மேலும் அங்கு ஊட்டி லஞ்ச ஒழிப்பு போலீஸ் இன்ஸ்பெக்டர் பரிமளா, சப்இன்ஸ்பெக்டர் சாதனா பிரியா மற்றும் போலீசார் பதுங்கி இருந்தனர்.

உம்மு சல்மா லஞ்ச ஒழிப்பு போலீசார் கூறியபடி தாசில்தார் ராஜேஸ்வரியிடம் இவ்வளவு பணம் தான் என்னிடம் உள்ளது என கூறி கொடுத்தார். அதை தாசில்தார் ராஜேஸ்வரி வாங்கி கொண்டார். அப்போது அவரை லஞ்ச ஒழிப்புபோலீசார்கையும், களவுமாக பிடித்து கைது செய்தனர்.

இதுகுறித்து லஞ்ச ஒழிப்பு போலீசார் கூறும்போது, கைது செய்யப்பட்ட தாசில்தார் ராஜேஸ்வரி, உம்மு சல்மாவிடம் ரூ.2½ கோடி சொத்துக்கு ரூ.2 லட்சம் கொடுத்தால் என்ன? எனக்கூறி பல முறை லஞ்சம் கேட்டு வற்புறுத்தி உள்ளார். மேலும் பல நாட்களாக அலைக்கழித்துள்ளார். தற்போது லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் அளித்ததால் தாசில்தார் ராஜேஸ்வரி கையும், களவுமாக சிக்கினார் என்றனர்.

# அரசு மருத்துவர் இடஒதுக்கீடு ரத்து: சமூக நீதிக்கே எதிரானது விஜயபாஸ்கர்



சென்னை, ஜூலை 13
அதிமுக முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வெளியிட்டு செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது,

தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளின் முதுநிலைப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் அரசு மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 50 சதவீத இடஒதுக்கீடு, 15 வகையான மேற்படிப்புகளுக்கு நடப்பாண்டில் ரத்து செய்யப்படுவதாக தமிழக அரசு அறிவித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

இந்தியாவிலேயே மிகச் சிறந்த உட்கட்டமைப்பைக் கொண்டு பொது சுகாதாரத் துறையில் தமிழகம் வலுவாக இருப்பதற்கு பேருதவி புரிபவர்கள் அரசு மருத்துவர்கள். அப்பேற்பட்ட சேவை மருத்துவர்களின் மருத்துவக் கனவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திடும் இந்த "திடீர் அரசாணை" அவர்களுக்கு பேரதிர்ச்சி அளிப்பதோடு, இது சமூக நீதிக்கே எதிரானது.

தமிழ்நாட்டில் உள்ள 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் குறிப்பாக புதிதாக தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் (மருத்துவம் அல்லாத சிறப்பு பிரிவு, காது மூக்கு தொண்டை சிகிச்சை பிரிவு, கண் சிகிச்சை பிரிவு, தோல் சிகிச்சை பிரிவு, மனநலம் சிகிச்சை பிரிவு) தேவை உள்ள நிலையில் இந்த அரசாணை சேவை மருத்துவர்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி இருக்கிறது.

ஆகவே, அரசு மருத்துவமனைகளில் சேவை புரிந்து வரும் மருத்துவர்கள் பட்ட மேற்படிப்பு படிப்பதற்கான 50% இடஒதுக்கீட்டு இடங்களை ரத்துசெய்தஅரசாணையை உடனடியாக தமிழ்நாடு அரசு திரும்ப பெற வேண்டுமென்றும், அரசு மருத்துவர்களின் கல்வி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான வாய்ப்புகள் பறிபோவதை தடுத்து நிறுத்திட வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன்.

# புதுக்கோட்டையில் என்கவுண்டரில் ரவுடி சுட்டுக்கொலை



புதுக்கோட்டை, ஜூலை 13
திருச்சி எம்ஜிஆர் நகரை சேர்ந்த ரவுடி துரை. இவர் புதுக்கோட்டை வம்பன் காட்டுப்பகுதியில் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து போலீசார் காட்டுப் பகுதிக்கு சென்றனர். ரவுடி துரையை பிடிக்க சென்றபோது போலீசாருக்கும் ரவுடி துரைக்கும் மோதல் ஏற்பட்டது. அதனை தொடர்ந்து போலீசாரை ரவுடி துரை தாக்கியதால் பாதுகாப்பிற்காக போலீசார் துப்பாக்கியால் சுட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

யார் இந்த ரவுடி துரை?

ரவுடி துரை என்கிற ( துரைசாமி) மீது ஏற்கனவே 70 வழக்குகள் நிலுவையில் உள்ளதாக இருப்பதாக போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். சரித்திர பதிவேடு குற்றவாளியான ரவுடி துரை மீது 4 கொலை வழக்கு, கொலை முயற்சி, வழிப்பறி, திருட்டு உள்பட 70 வழக்குகள் உள்ளன. 2023ல் திருச்சியில் ஏற்கனவே திருட்டு வழக்கிற்காக விசாரணைக்கு அழைத்துசென்றபோது தப்பி சென்றவர் ரவுடி துரை.

ரவுடி என்கவுன்ட்டர் நடந்தது என்ன?

திருவரங்குளம் காட்டுப்பகுதியில், துரைசாமி ஆயுதங்களுடன் சுற்றித்திரிவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

ஆலங்குடி இன்ஸ்பெக்டர் முத்தையன் தலைமையில் 4 போலீசார் காட்டு பகுதிக்கு சென்று தேடுதல் வேட்டை நடத்தினர்.

போலீசாரை பார்த்ததும், தாக்கிவிட்டு தப்ப முயன்ற போது துரைசாமி சுடப்பட்டார். கடந்த 2022 டிசம்பரில் இளவரசன் என்ற ரவுடி கொலை செய்யப்பட்ட வழக்கில், துரைசாமி முக்கிய குற்றவாளி என கூறப்படுகிறது.

# அவதூறு பரப்புவதில் அவார்டுகள் பல வாங்கி வைத்துள்ள இயக்கமே திமுக தான் ஜெயக்குமார்



சென்னை, ஜூலை 13
முன்னாள் அதிமுக அமைச்சர் ஜெயக்குமார் கூறியிருப்பதாவது,

நாம் தமிழர் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் தம்பி சாட்டை துரைமுருகன் அவர்களை கைது செய்திருப்பது கருத்துரிமையின் கழுத்தை நெரிக்கும் செயல்!

அவதூறு பரப்புவதில் அவார்டுகள் பல வாங்கி வைத்துள்ள இயக்கமே திமுக தான்!

சாட்டை சேனலில் திமுக அரசின் அவலங்களை தொடர்ந்து அம்பலப்படுத்தியதற்காகவும் மேடைகளில் ஸ்டாலின் அரசின் தோல்விகளை அடுக்கியதற்காகவும் தமிழ்நாட்டை சூறையாடி தின்று கொழுத்த திமுகவை விமர்சித்து வந்ததற்காகவும் பழிவாங்கி உள்ளது திறனற்ற திமுக அரசு!

பாசிச ஆட்சி நடத்தி கொண்டிருக்கும் ஸ்டாலின், அவருடைய ஆட்சிக்கான முடிவுரையே அவரே எழுதிக் கொள்ள ஆரம்பித்து விட்டார்!!

இவ்வாறு கூறியுள்ளார்.

# தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் அண்ணாமலை வீடு முன்பு ஆர்ப்பாட்டம்



சென்னை, ஜூலை 13
தமிழக பாஜக கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலைக்கும் காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வ பெருந்தகைக்கும் இடையே சமீப காலமாக மோதல் போக்கு என்பது நிலவி வருகிறது. இந்நிலையில் அண்ணாமலை செல்வப் பெருந்தகை மீது பல்வேறு குற்றசாட்டுகளை சுமத்தினார். ஆடிட்டர் பாண்டியன் கொலை வழக்கு பற்றி அனைவருக்கும் தெரியும். அதில் குண்டர் சட்டத்தின் கீழ் செல்வப் பெருந்தகையை காவல்துறையினர் கைது செய்ய சென்ற போது அவர் காலை உடைத்துக் கொண்டார். நீங்கள் லண்டனில் முதலீடு செய்த பணம் பற்றிய விஷயத்தை எல்லாம் நான் வெளியே கொண்டு வருகிறேன்.

இதுதான் தமிழகத்தின் தலைவிதி என்றால் அதை கையில் எடுக்க நான் தயாராக இருக்கிறேன். ஒவ்வொருவரிடமும் சண்டை போட்டால் தான் தமிழகத்தில் அரசியல் திருந்தும் என்றால் நான் என்னை அர்ப்பணிக்க தயாராக இருக்கிறேன். ரிசர்வ் வங்கியில் கடைநிலைஊழியராகவேலை பார்த்தவர் செல்வப் பெருந்தகை. அவர் லண்டனில் என்னவெல்லாம் வாங்கியுள்ளார். அவர் மனைவி மீது என்ன இருக்கிறது. ஆடிட்டர் பாண்டியன் கொலை வழக்கில் எதற்காக மாற்றி பேசினார்கள் போன்ற அனைத்து விஷயங்களையும் பற்றி பேச நான் தயாராக உள்ளதாகவும். தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் எப்படி இருக்கிறார் என்பது மக்களுக்கு தெரிந்தால் தான் அதை வைத்து அவர்கள் ஓட்டு போடுவார்கள். இது போன்ற நபர்களை நான் படம்பிடித்து காட்டாமல் விடமாட்டேன். மேலும் காங்கிரஸ் கட்சி ஆரம்பித்ததில் இருந்து இதுவரை குண்டர் சட்டத்தில் கைதான ஒருவர் மாநில தலைவராக இருந்ததில்லை என்று கூறினார்.

இந்நிலையில் காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகையை ரவுடி என கூறியதை கண்டித்து செல்வ பெருந்தகையின் ஆதரவாளர்கள் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வீட்டு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதை தொடர்ந்து அந்த பகுதியில் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளார். அந்த பகுதி பரபரப்பாக காணப்படுகிறது.

# திருப்பூர் கலெக்டர் அலுவலகம் முன்பு கரும்புகளுடன் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



திருப்பூர்,ஜூலை.13
திருப்பூர் மாவட்டம் உடுமலையில் அமராவதி கூட்டுறவுசர்க்கரைஆலை செயல்பட்டு வருகிறது. கடந்த 20 ஆண்டுகளாக இந்த ஆலையை புனரமைக்க அரசு நிதி ஒதுக்கவில்லை.

எனவே கடந்த சில ஆண்டுகளாக சிறிது சிறிதாக பிழித்திறன் இழந்து கடந்த ஆண்டு முற்றிலும் ஆலை இயங்காமல் நிறுத்தப்பட்டு விட்டது. இந்த ஆலையைச் சுற்றியுள்ள பகுதி முழுவதும் கரும்பு விளைவதற்கு ஏற்ற நீர் வளம் மற்றும் நிலவளம் கொண்ட பகுதியாகும்.

சிறப்பம்சம் கொண்ட இந்த ஆலை பராமரிப்பு இன்றி தற்போது இயங்கப்படாமல் இருப்பதால் கரும்பு விவசாயிகள், ஆலை தொழிலாளர்கள், கரும்பு வெட்டும் தொழிலாளர்கள், விவசாயக் கூலித்தொழிலாளர்கள் மற்றும் அதனை சார்ந்துள்ளவர்கள் பாதிப்புக்கு உள்ளாகி உள்ள னர் .

எனவே மக்கள் மற்றும் விவசாயிகள் நலன் கருதி தமிழ்நாடு அரசு முழுமையாக ஆலையை புனரமைக்க போதிய நிதி ஒதுக்கீடு செய்ய வலியுறுத்தி திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலு வலகம் முன்பாக அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

சங்கத்தின் மாவட்ட தலைவர் பால தண்டபாணி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் மாநில செயலாளர் ரவீந்திரன் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியு றுத்தி பேசினார். விவசாயிகள் பலர் கரும்புகளுடன் வந்து கலந்து கொண்டனர்.

# காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு: கல்லூரி மாணவர் தூக்குப்போட்டு தற்கொலை

ஓசூர், ஜூலை 13
திருவண்ணாமலை மாவட்டம் பென்னத்தூர் அருகே வேட்டவலம் பக்கமுள்ள கல்லாவி சுரத்துரை சேர்ந்தவர் பன்னீர்செல்வம். இவருடைய மகன் சிவாஜி (19). இவர் ஓசூர் செம்படதெருவில் பெற்றோருடன் தங்கி மிடிகிரிப்பள்ளியில் உள்ள கல்லூரி ஒன்றில் பி.பி.ஏ. 3ம் ஆண்டு படித்து வந்தார். மேலும் இவர் ஒரு பெண்ணை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. இவரது காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் மனமுடைந்த சிவாஜி, செம்ப டதெருவில் அவர் தங்கி உள்ள வீட்டில் தூக்கு ப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து ஓசூர் டவுன் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு விசாரணை நடத்தினர். தொடர்ந்து போலீசார் மாணவரின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்தனர் இதையடுத்து சிவாஜியின் பெற்றோர் விரைந்து வந்து மகனின் உடலை பார்த்து கதறி அழுதனர். பின்னர் போலீசார் மாணவரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஓசூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததால் கல்லூரி மாணவர் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டசம்பவத்தால் அப்பகுதி சோகத்தில் மூழ்கியது.

# சேவை ஒதுக்கீட்டு இடங்களை ரத்து செய்வது அல்லது மாற்றம் செய்வது ஏற்கத்தக்கதல்ல: எடப்பாடி பழனிச்சாமி



சென்னை, ஜூலை 13
அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தமிழ்நாடு அரசு, அரசுப் பணியிலுள்ள மருத்துவர்கள் பட்ட மேற்படிப்பு படிப்பதற்கான ஒருசில பாடப் பிரிவுகளை தவிர மற்ற பிரிவுகளுக்கான சேவை ஒதுக்கீட்டு இடங்களை ரத்து செய்துள்ளது. இது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. இந்த நடவடிக்கை, அரசு மருத்துவர்களின் கல்வி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான வாய்ப்புகளைப் பறிக்கும் ஒரு மோசமான செயலாகும்.

மருத்துவர்கள் தங்கள் நேரத்தை மற்றும் உழைப்பை பொதுமக்களுக்கு சேவை செய்ய பயன்படுத்தியிருக்கிறார்கள். இதற்குப் பதிலாக அரசு அவர்களது கல்வி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை ஊக்குவிக்கவேண்டும். ஆனால், இப்படி ஒரு முடிவை எடுப்பதன் மூலம், அரசு மருத்துவர்களின் எதிர்கால கனவுகளைத் தகர்த்துள்ளது கடும் கண்டனத்திற்குரியது.

விடியா திமுக அரசு, மத்திய அரசின் வேலை வாய்ப்பு ஒழிப்பு கொள்கைகளை எதிர்ப்பதாக கூறி மக்களிடம் கபட நாடகம் ஆடுவது இந்த உத்தரவின் மூலம் வெளிப்பட்டுள்ளது. இந்த சேவை ஒதுக்கீட்டு இடங்களை ரத்து செய்வதோ அல்லது மாற்றம் செய்வது ஏற்கத்தக்கதல்ல. இது முழுமையானஇரட்டை வேடத்தை காட்டுகிறது.

இது மருத்துவப் பட்ட மேற்படிப்புகளை படிக்க விரும்பும் அரசுப் பணியிலுள்ள மருத்துவர்களின்எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி உள்ளது. எனவே உடனடியாக அரசு பணியிலுள்ள மருத்துவர்கள் பட்ட மேற்படிப்பிற்கான ஒதுக்கீட்டை ரத்துசெய்து விடியா திமுக அரசு வெளியிட்ட அரசாணையைதிரும்பப்பெறும்படி வலியுறுத்துகிறேன் என்று கூறியுள்ளார்.

# மதுரையில் ரூ.2 கோடி கேட்டு கடத்தப்பட்ட சிறுவன் 3 மணி நேரத்தில் மீட்பு

மதுரை, ஜூலை 13

மதுரையில் ரூ.2 கோடி கேட்டு கடத்தப்பட்ட 14 வயது பள்ளி மாணவன் 3 மணி நேரத்தில் மீட்கப்பட்டார். எஸ்எஸ் காலனியில் இருந்து ஆட்டோவில் பள்ளிக்கு சென்ற மாணவரை கடத்தி அவரது தாயாரிடம் ரூ.2 கோடி கேட்டு மிரட்டல் விடுத்தனர். ஆட்டோ ஓட்டுநருடன், மாணவரை கடத்திய கும்பல் அவரது தாயார் மைதிலியை தொடர்பு கொண்டு ரூ.2 கோடி கேட்டது. ரூ.2 கோடி தராவிட்டால் சிறுவனை கொன்று விடுவதாகவும், போலீசுக்கு போனாலும் கண்டு பிடிக்க முடியாது எனவும் மிரட்டல் விடுத்தனர்.

இது குறித்து எஸ்.எஸ். காலனி காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் உடனடியாக களத்தில் இறங்கிய தனிப்படை போலீசார், சிறுவனை தேடி வந்தனர். போலீசார் நெருங்கி வருவதை அறிந்து, சிறுவன், ஆட்டோ டிரைவரை நாகமலை புதுக்கோட்டை 4 வழிச்சாலையில் இறக்கிவிட்டு கும்பல் தப்பியது. சிறுவனை இறக்கிவிட்டு தப்பியோடிய கடத்தல் கும்பலை போலீசார் தேடி வருகின்றனர்.

# 20 வயது இளம்பெண்ணை திருமணம் செய்த பஸ் டிரைவர்

திருச்சி, ஜூலை 13

ஐம்பதிலும் ஆசை வரும் என்ற சினிமா பாடலை மெய்ப்பிக்கும் விதமாக 56 வயது அரசு பஸ் டிரைவர் 20 வயது இளம்பெண்ணை கடத்தி திருமணம் செய்த சம்பவம் திருச்சி அருகே நடந்துள்ளது. உனக்கு 20 எனக்கு 56 திருச்சி மாவட்டம் கூத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் சுல்தான் பாஷா (வயது 56). இவர் துவரங்குறிச்சி அரசுப் போக்குவரத்து கழக பணி மனையில் டிரைவராக பணி புரிந்து வருகிறார். இவருக்கு 2 மனைவிகள் உள்ளனர்.

இவர் மணப்பாறையில் இருந்து சிவகங்கை மாவட்டத்துக்கு செல்லும் பஸ்சில் டிரைவராக பணியாற்றி வந்தார். அப்போது அவருக்கும் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி தாலுகா கொண்டபாளையம் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளம்பெண்ணுக்கும் பழக்கம் ஏற்பட்டது.

தந்தைமகள் வயதில் ஏற்பட்ட இந்த பழக்கம் நாளடைவில் காதலாக மாறியது. வயதை மீறிய காதல் டிரைவர் மற்றும் இளம் பெண்ணின் வீட்டாருக்கு தெரியாத நிலையில் 2 பேரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர். கடந்த 2 நாட்களுக்கு முன்னர் ஓடிப்போய் திருமணம் செய்து கொண்டதாக கூறப்படுகிறது. பின்னர் அந்த பெண்ணை சுல்தான் பாஷா கூத்தூர் பகுதிக்கு அழைத்து வந்து விட்டார்.' இதனிடையே மகளை அழைத்து சென்று திருமணம் செய்த தகவல் அறிந்து கொண்டபாளையம் பகுதியில் இருந்து பெண்ணின் உறவினர்கள் கூத்தூருக்கு திரண்டு வந்தனர். பின்பு அவர்கள் சுல்தான் பாஷா பணிபுரியும் துவரங்குறிச்சி அரசுப் பேருந்து பணி மனையின் நுழைவுவாயில் முன்பு திரண்டு முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். 20 வயது இளம்பெண்ணை மீட்டு தரக்கோரி அங்கிருந்த அதிகாரிகளிடமும் முறையிட்டனர்.

'இதனால் பணிமனையில் இருந்து பேருந்துகள் வெளியில் செல்ல முடியவில்லை. உடனே தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்ததுவரங்குறிச்சி போலீசார் முற்றுகையில் ஈடுபட்ட இளம்பெண்ணின் உறவினர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். மேலும் பெண்ணின் ஊருக்கு அருகே உள்ள புழுதிப்பட்டி காவல் நிலையத்தில் சென்று புகார் அளிக்குமாறு கூறி அனுப்பி வைத்தனர்.

இதனால் பெண்ணின் உறவினர்கள் அங்கிருந்து சென்றனர். அதன் பிறகு பணிமனையில் இருந்து பேருந்துகள் இயக்கப்பட்டன. இதனால் பணி மனையில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. ஏற்கனவே 2 மனைவிகள் உள்ள நிலையில் மகள் வயது உடைய இளம் பெண்ணை 56 வயது அரசு பஸ் டிரைவர் திருமணம் செய்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வீட்டில் பெண்களை வைத்து விபசாரம் செய்த முதியவர்: தூத்துக்குடியில் பரபரப்பு

தூத்துக்குடி, ஜூலை 13

தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் ஸ்டேப்ளி தெருவை சேர்ந்தவர் ராஜன் (வயது 68). இவர் நாசரேத் பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்த ஸ்ரீவைகுண்டத்தை சேர்ந்த இசக்கிதுரை (40) என்பவரிடம் பேச்சு கொடுத்துள்ளார். அப்போது தனது வீட்டில் வெளியூரை சேர்ந்த பெண்களை விபசாரத்திற்காக தங்க வைத்திருப்பதாகவும், பணம் கொடுத்துவிட்டு தன்னுடன் வந்தால் பெண்ணிடம் உல்லா சமாக இருக்கலாம் என்று கூறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த இசக்கிதுரை நாசரேத் போலீசாரிடம் புகார் செய்தார். இதன்பேரில் நாசரேத் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜீன்குமார் தலைமையில் போலீசார் ஸ்டெப்ளி தெருவிலுள்ள ராஜன் வீட்டில் அதிரடி சோதனை நடத்தினர்.



அங்கு விபசாரத்தில் ஈடுபடுத்த தங்க வைக்கப்பட்டிருந்த நெல்லை டவுன், தூத்துக்குடி மற்றும் நாசரேத்தைச் சேர்ந்த 3 பெண்களை போலீசார் மீட்டனர். இதுகுறித்து நாசரேத் போலீசார் வழக்குப்பதிவு செய்து ராஜனைகைதுசெய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பெற்றோர் இல்லாத பெண்ணுக்கு ஊர் மக்கள் செய்த நெகிழ்ச்சி செயல்



பண்ருட்டி, ஜூலை 13

கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டம் காட்டுக்கூடலூரை சேர்ந்தவர் ஆறுமுகம். இவரும் இவரது மனைவியும் கொரோனாவில் இறந்து போயினர். இதனை தொடர்ந்து இவர்களது ஒரே மகள் சங்கீதா பாட்டி வீட்டில் வளர்ந்து வந்தார். இவர் பிளஸ்2 முடித்துவிட்டு, ஊரில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாக டியூஷன் நடத்தி வந்தார்.

பெற்றோரை இழந்த சங்கீதாவிற்கு திருமண வயது வந்தது. பெற்றோர் இல்லாத சங்கீதாவிற்கு திருமணம் செய்து வைக்க ஊர் மக்கள் ஒன்று கூடி முடிவு செய்தனர். தொடர்ந்து கோட்டேரியை சேர்ந்த சங்கர் என்பவருக்கு 2 ஆண்டுகளுக்கு முன்பாக ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து திருமணம் செய்து வைத்தனர்.

தொடர்ந்து இளநிலை பட்ட படிப்பிற்கு தொலைதூர கல்வி திட்டத்தில் விண்ணப்பித்த சங்கீதா அதனை படித்து வருகிறார். இந்த நிலையில் சங்கீதா கருவுற்றார். இத்தகவல் காட்டுக்கூடலூர் கிராம மக்களுக்கு தெரிய வந்தது. இதனை தொடர்ந்து தாய் வீட்டின் சார்பில் வளைகாப்பு நடத்த முடிவு செய்தனர்.

அதனை தொடர்ந்து ஊர் மக்கள் ஒன்று கூடி, 5 விதமான சாத வகைகள், பலகாரம், பால், பழங்கள் போன்ற சீர் வரிசை பொருட்களுடன் சென்றனர். அங்கு நிறைமாத கர்ப்பிணியாக இருந்த சங்கீதாவிற்கு தாய் வீட்டின் சார்பில் ஊர்மக்கள் வளைகாப்பு நடத்தினர். பெற்றோர் இல்லாத இளம் பெண்ணுக்கு ஊர்மக்கள் கூடி வளைகாப்பு நடத்திய சம்பவம் பண்ருட்டி பகுதி மக்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# மேகமலைமூணாறு மலைப்பகுதியில் அரிய வகை பாம்புகள் கண்டுபிடிப்பு



சின்னமனூர், ஜூலை 13

இந்தியாவில் மேற்கு தொடர்ச்சி மலை என்பது அருட்கொடையான பகுதியாகும். கேரளாவில் தொடங்கி மஹாராஷ்டிரா வரை நீண்டுள்ள இந்த மலைப்பகுதி அரிய வகை மரங்கள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை கொண்டிருப்பதுடன் மழை வளத்துக்கும் முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

இங்கு பல்வேறு வகை அரிய விலங்குகள், பாம்புகள் வசிக்கப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். இந்நிலையில் ஷோலோ காடுகளின் மீதான ஆர்வலர்கள் இப்பகுதியில் மேற்கொண்ட ஆய்வில் 'டெயில்ஸ்பாட் ஷீல்டு டெயில்' எனப்படும் அரிய வகை பாம்பை கண்டறிந்துள்ளனர்.

இது குறித்து இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்ட பேராசிரியர் தெரிவிக்கையில், பாம்புகள் பெரும்பாலும் தங்கள் வாழ்நாளின் பெரும் பகுதியை பூமிக்கடியில் கழிப்பதகவும், மழைக்காலத்தின் போது இனப்பெருக்கம் செய்வதற்காக வெளியில் வருவதாகவும் தெரிவித்தனர்.

கொடைக்கானல் மலைப்பகுதியிலும், மேகமலைமூணாறு மலைப்பகுதியிலும் ஒரே மாதிரியான தோற்றம் கொண்ட பாம்புகள் இருந்ததால் குழப்பம் ஏற்பட்டது. இதன் மீது 3 ஆண்டுகள் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் டி.என்.ஏ. தரவுகளுடன் பல அருங்காட்சியக மாதிரிகளை ஒப்பிட்டு பார்த்ததில் இங்கு இருப்பது அரிய வகை பாம்பு என கண்டறியப்பட்டுள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலைகளில் மறைக்கப்பட்ட பன்முகத் தன்மையை இந்த பாம்பு வகை எடுத்துக் காட்டுகிறது. இந்தியாவில் ஊர்வன விலங்குகள் மாறுபட்ட தன்மை கொண்டதாகும். 50 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ளூர் இனங்களும், அகாசியா, லந்தானா, வாட்டில் போன்ற அன்னிய ஊர்வன விலங்குகளும், மலை சார்ந்த பகுதிகளில் உள்ளன. இவை பெரும்பாலும் அச்சுறுத்தலுக்கு உள்ளானது.

பாம்புகளில் விஷத் தன்மை கொண்டது, விஷத்தன்மை இல்லாதது என இருந்தபோதும், இவை பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாகவே உள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் இருந்து மட்டும் 15 வகை புதிய பாம்பு இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை சர்வ தேச மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழில் வெளியிடப்பட்டுள்ளது என்றனர்.

# ஆம்ஸ்ட்ராங் படுகொலை: 11 பேருக்கு 5 நாள் போலீஸ் காவல் நீதிமன்றம் உத்தரவு



சென்னை, ஜூலை 13

பெரம்பூரைச் சேர்ந்த பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங்கை கடந்த 5ம் தேதி இரவு ஒரு கும்பல் சரமாரியாக வெட்டி படுகொலை செய்தது. இந்த சம்பவம் தமிழகத்தையே உலுக்கிய நிலையில் இதுவரை 11 நபர்களை செம்பியம் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். கடந்தாண்டு ரவுடி ஆற்காடு சுரேஷ் கொலை செய்யப்பட்டதற்கு பழிக்குப்பழியாக ஆம்ஸ்ட்ராங்கை கொலை செய்ததாக ஆற்காடு சுரேஷின் சகோதரர் பாலு வாக்கு மூலம் அளித்துள்ளார்.

இந்த வழக்கில் யார் யார் பின்னணியில் உள்ளனர்? என்பது தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும், கைது செய்யப்பட்ட நபர்களை மீண்டும் காவலில் எடுத்து விசாரணை செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து பாதுகாப்பு காரணங்களுக்காக கொலையாளிகளை காணொலி மூலம் போலீசார் ஆஜர் படுத்தினர்.


இந்நிலையில் ஆம்ஸ்ட்ராவ் வழக்கு: 11 பேருக்கு 5 நாள் போலீஸ் காவல் வழங்கி சென்னை எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதை தொடர்ந்து 7 நாள் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கோரியிருந்த நிலையில் 5 நாள் காவல் வழங்கி எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

கொலை சம்பவத்தை நேரில் பார்த்த உறவினர்களை அழைத்து கொலையாளிகளை நிற்க வைத்து அடையாள அணிவகுப்பு நடத்தவும், கொலையாளிகளுக்கு நிதி உதவி, சட்ட உதவி அளித்தது, கொலையின் பின்னணியில் யார் இருப்பது? என்பது குறித்து விசாக்க திட்டமிட்டுருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

முக்கிய குற்றவாளியாக கருதப்படும் பொன்னை பாலுவுக்கும், கொலைக்கான திட்டத்தை வகுத்துக் கொடுத்தது யார் என்பது தொடர்பாகவும் விசாரிக்க முடிவு எடுத்துள்ளனர்.

# ஈரோட்டில் பிளாஸ்டிக் பைப் குடோனில் தீ விபத்து



ஈரோடு, ஜூலை 13

ஈரோடு பஸ் நிலையம் அருகே சத்தி ரோட்டில் பரணி பைப்ஸ் அண்ட் ட்யூப்ஸ் மொத்த விற்பனை கடை செயல்பட்டு வருகிறது. கடையின் உரிமையாளர் ராவணன். கடையின் பின்பகுதியில் பெரிய அளவில் குடோன்கள் செயல்பட்டு வருகிறது. கடையில் வீட்டிற்கு தேவையான பிளாஸ்டிக் பொருட்கள், தண்ணீர் தொட்டிகள், அதன் மூலப்பொருட்கள் என கோடி ரூபாய் மதிப்பில் பொருட்கள் உள்ளன.

வழக்கம் போல் கடையில் ஊழியர்கள், வேலையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். காலை 11 மணியளவில் கடையின் ஒரு இடத்தில் மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது. இதை அணைக்கும் முயற்சியில் கடை ஊழியர்கள் ஈடுபட்டனர். அதற்குள் தீ மளமள வென அடுத்தடுத்த இடங்களில் பரவியது.

இதனால் கரும்புகை விண்ணை தொடும் அளவில் வெளியேறியது. இது குறித்து தகவல் அறிந்த ஈரோடு தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் தீ கட்டுக்கடங்காமல் அடுத்தடுத்த இடங்களுக்கு பரவியதால் கூடுதலாக ஈரோடு, பவானி, பெருந்துறை, மொடக்குறிச்சி என 6க்கும் மேற்பட்ட தீயணைப்பு நிலையங்களில் இருந்து வாகனங்கள் வரவழைக்கப்பட்டு ஈரோடு மாவட்ட தீயணைப்பு அலுவலர் அம்பிகா தலைமையில் 40க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ந்து இந்த தீ அடுத்தடுத்த கடைகளுக்கும், குடோன்களுக்கும் பரவி வருவதால் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மேலும் கரும்புகை தொடர்ந்து வெளியேறி வருவதால் அக்கம்பக்கத்தில் உள்ள கடைகள் குடியிருப்புகளில் உள்ள பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியேறி நின்று கொண்டனர்.

அதேபோல் அருகில் தனியார் பெண்கள் மருத்துவமனை மற்றும் குழந்தைகள் கருத்தரித்தல் மையம் செயல்பட்டு வருகிறது. அங்கும் கரும்புகை பரவியதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டு ஆம்புலன்ஸ் மூலம் மற்றொரு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அருகில் கடையில் உள்ளவர்கள் அவசர அவசரமாக தங்களது பொருட்களை வெளியேற்றி வருகின்றனர். மேலும் கரும்புகை 2 கிலோ மீட்டர் தூரம் அளவிற்கு பரவியதால் பொதுமக்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

மேலும் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு வீரருக்கு காயம் ஏற்பட்டது அவர் உடனடியாக மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். மேலும் கடையில் இருந்த 2 பேருக்கு தீக்காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இது குறித்த விபரம் உடனடியாக தெரியவில்லை.

தொடர்ந்து தீயை அணைக்க தீயணைப்புத் துறையினர் போராடி வருகின்றனர். ஆனால் காற்றின் வேகம் காரணமாக கரும்புகை அருகில் இருக்கும் கட்டிடங்களுக்கும் பரவியது. 6 தீயணைப்பு நிலையங்களில் இருந்து வாகனங்கள் கொண்டுவரப்பட்டு தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்பட்டு வருகிறது. எனினும் தண்ணீர் தேவையான அளவு இல்லை. இதை தொடர்ந்து மேலும் மாவட்டம் முழுவதும் உள்ள மற்ற தீயணைப்பு நிலையங்களில் இருந்து வாகனங்கள் கொண்டுவரப்பட்டு தீயணைக்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

வேடிக்கை பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டதால் ஈரோடுசத்தி ரோட்டில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. போக்குவரத்து போலீசார் அதனை சீர்படுத்தி வருகின்றனர். இந்த தீ விபத்தில் கடையில் இருந்த பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் எரிந்து சேதமானது. தொடர்ந்து தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்து வருவதால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

# ஐபிஎஸ் அதிகாரி வருண்குமார் சாதி வெறுப்புடன் செயல்படுகிறார் சீமான்



சென்னை, ஜூலை 13

விக்கிரவாண்டி இடைத் தேர்தல் பிரசார மேடையில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி குறித்து அவதூறாக பேசியதாக அளிக்கப்பட்ட புகாரின்பேரில் நாம் தமிழர் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் சாட்டை துரைமுருகன் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ தேவர், நாடார், கோனார், தேவேந்திரர் மீது வருணுக்கு பிறப்பு வெறுப்பு. அதனால் அவர்களுக்கு எதிராக செயல்படுகிறார்.

★ ஐபிஎஸ் அதிகாரி வருண்குமார் சாதி வெறுப்புடன் செயல்படுகிறார் என்பதற்கு ஆதாரம் உள்ளது.

★ சாட்டை துரைமுருகனை குறி வைத்து திருச்சி மாவட்ட எஸ்பி வருண்குமார் செயல்படுகிறார் என்று அவர் கூறினார்.

# அழகுமுத்துக்கோன் அவர்களது வீரத்தையும் தியாகத்தையும் போற்றி வணங்குகிறோம்: அண்ணாமலை



சென்னை, ஜூலை 13


சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோனின் 314வது பிறந்தநாள் இன்று தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது,

தேச விடுதலைக்காக, இறுதிவரை துணிச்சலுடன் போராடி, தன்னுயிரையே தியாகம் செய்த மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்கள் பிறந்த தினம் இன்று.

சென்னை எழும்பூரில் உள்ள மாவீரன் அழகுமுத்துக்கோன் திருவுருவச் சிலைக்கு, தமிழக பாஜக மூத்த தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் சென்று, மலர் மாலை அணிவித்து, மரியா தை செலுத்தி வணங்கி னோம். நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, 2015 ஆம் ஆண்டு, மாவீரன் அழகுமுத்துக்கோனுக்கு தபால் தலை வெளியிட்டுப் புகழ் சேர்த்தது பெருமைக்குரியது. ஆங்கிலேயர்களுக்கு எதிரான போரில், இறுதிவரை பின்வாங்காமல், அச்சமின்றிப் போரிட்ட மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களது வீரத்தையும் தியாகத்தையும் போற்றி வணங்குகிறோம் என்று கூறியுள்ளார்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
13.7.2024




## தனுஷுக்கு ஜோடியாகும் அனிமல் பட நடிகை ?

நடிகர் தனுஷ் கேப்டன் மில்லர் படத்திற்கு பிறகு தனது 50வது படமான ராயன் திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார். அதைத்தொடர்ந்து சேகர் கம்முலா இயக்கத்தில் குபேரா திரைப்படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு மும்பை, ஐதராபாத் போன்ற பகுதிகளில் பரபரப்பாக நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் நடிகர் தனுஷ் இசைஞானி இளையராஜாவின் பயோபிக் படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தமாகியுள்ளார்.

தனுஷ் கடந்த ஆண்டு தேரே இஷ்க் மெய்ன் படம் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டிருந்தார். இந்தியில் உருவாகும் இந்த படத்தை பாலிவுட் இயக்குனர் ஆனந்த் எல் ராய் இயக்க இருக்கிறார்.

மேலும் ஏ. ஆர். ரகுமான் இந்த படத்திற்கு இசையமைக்க இருக்கிறார். ஏற்கனவே தனுஷ், ஆனந்த் எல் ராய் கூட்டணி ராஞ்சனா, அத்ரங்கி ரே ஆகிய படங்களில் இணைந்து இருந்த நிலையில் தற்போது மூன்றாவது முறையாக 'தேரே இஷ்க் மெய்ன்' திரைப்படத்திலும் இணைய இருக்கிறது. இதன் படப்பிடிப்பு 2024 அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் தொடங்கப்படும் என சமீப காலமாக செய்திகள் பரவி வருகிறது.

இந்நிலையில் , அனிமல் திரைப்படத்தில் நடித்திருந்த திரிப்தி டிம்ரி, தனுஷுக்கு ஜோடியாக 'தேரே இஷ்க் மெய்ன்' படத்தில் நடிக்கப் போகிறார் என்று புதிய தகவல்கள் வெளிவந்துள்ளன.

## படப்பிடிப்பில் விபத்து: பிரபல நடிகைக்கு எலும்பு முறிவு



தமிழில் சரவணன் அருள் நடித்த 'லெஜெண்ட்' படத்தில் அறிமுகமான ஊர்வசி ரவுத்தலா இந்தியில் முன்னணி நடிகையாக இருக்கிறார். தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார். சில படங்களில் ஒரு பாடலுக்கு குத்தாட்டமும் ஆடி உள்ளார். இவருக்கு நிறைய ரசிகர்கள் உள்ளனர். தற்போது தெலுங்கில் பாலகிருஷ்ணா நாயகனாக நடிக்கும் படத்தில் ஊர்வசி ரவுத்தலா நடித்து வருகிறார். இதில் பாபிதியோல் உள்ளிட்ட மேலும் பலர் நடிக்கின்றனர். இந்த படத்துக்காக ஐதராபாத்தில் சண்டை காட்சியொன்று படமாக்கப்பட்டது. இதில் பங்கேற்று நடித்த ஊர்வசி ரவுத்தலா விபத்தில் சிக்கினார். அவருக்கு பலத்த அடிபட்டு காயம் மற்றும் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. உடனடியாக ஊர்வசி ரவுத்தலாவை ஐதராபாத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## நடிகர் அஜித்தை சந்தித்த டைரக்டர் வெங்கட் பிரபு




நடிகர் அஜித் குமாரின் முக்கியமான வெற்றிப் படம் 'மங்காத்தா'. 2011 ஆகஸ்ட் 31 அன்று வெளியான 'மங்காத்தா' அஜித் ரசிகர்களை மட்டுமல்லாமல் பொதுவான வெகுஜன சினிமா ரசிகர்களையும் பெரிதும் திருப்திப்படுத்தி பிளாக் பஸ்டர் வெற்றியைப் பெற்ற திரைப்படம். டைரக்டர் வெங்கட் பிரபுவின் திரை வாழ்விலும் முக்கியமான திரைப்படமாக அமைந்தது 'மங்காத்தா'. யுவன் ஷங்கர் ராஜாவின் பின்னணி இசை மிரட்டலாக அமைந்தது.

இந்தப் படத்துக்கு பின் தமிழ் சினிமாவில் முக்கியமான இயக்குநராக அறியப்படுகிறார். தற்போது வெங்கட் பிரபு நடிகர் விஜய்யை வைத்து 'கோட்' படத்தை இயக்கி வருகிறார். அதேநேரம் அஜித் குமார் விடாமுயற்சி படத்தில் நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்பு அஜர்பைஜான் நாட்டில் நடந்து வருகிறது. விடாமுயற்சி தீபாவளி வெளியீடாக வரவிருக்கிறது. இதற்கிடையேதான் அஜர்பைஜானில் வைத்து டைரக்டர் வெங்கட் பிரபு நடிகர் அஜித்தை சந்தித்துள்ளார். அப்பொழுது எடுத்துக்கொண்ட புகைப்படத்தை அவரின் சமூக வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்டுள்ளார். ரசிகர்கள் அப்புகைப்படத்தை அதிகம் பகிர்ந்து வைரலாக்கி வருகின்றனர். இருவரும் மீண்டும் இணைந்து படத்தில் பணியாற்ற வேண்டும் என கருத்து கூறிவருகின்றனர்.

## அமிதாப்பச்சன், ஷாருக்கானை தொடர்ந்து அலிபாக்கில் இடம் வாங்கிய நடிகை



பிரபல பாலிவுட் நடிகை கிருத்தி சனோன். தமிழ், தெலுங்கு மொழிகளில் வெளியான பிரபாஸின் 'ஆதிபுருஷ்' படத்தில் சீதை கதாபாத்திரத்தில் கிருத்தி சனோன் நடித்திருந்தார். சமீபத்தில் இவரது நடிப்பில் 'க்ரூ' என்ற இந்தி படம் வெளியானது.

இந்நிலையில்,நடிகைகிருத்திசனோன்மும்பையின் அலிபாக்நகரில்இடம்வாங்கியுள்ளார்.இந்தஅலிபாக் மும்பைக்கு தெற்கே அமைந்துள்ள ஒரு கடற்கரை நகரமாகும். இங்கு ஏற்கனவே பிரபல பாலிவுட் நடிகர்களான அமிதாப்பச்சன், ஷாருக்கான், ரன்பீர் சிங் போன்ற பிரபலங்களின் இடம் உள்ளது. தற்போது, இவர்களை தொடர்ந்து, நடிகை கிருத்தி சனோனும் பங்களா கட்ட சுமார் 2,000 சதுர அடி நிலத்தை வாங்கியுள்ளார். இதன் மூலம் கிருத்தி, அமிதாப் பச்சனின் பக்கத்து வீட்டாராக மாறியுள்ளார். அமிதாப் பச்சன், கடந்த ஏப்ரலில் இதே பகுதியில் 10,000 சதுர அடி நிலம் வாங்கினார். கிருத்தி, அலிபாக்கில் முதலீடு செய்வதற்கு முன், பெங்களூருவிலும், கோவாவில் உள்ள வில்லாவிலும் முதலீடு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

## தெலுங்கு படத்தில் அறிமுகமாகும் 'அனிமல்' பட நடிகர்



சந்தீப் ரெட்டி வங்கா இயக்கத்தில் ரன்பீர் கபூர் நடிப்பில் கடந்தவருடம்டிசம்பர்1ம்தேதிவெளியானபடம்'அனிமல்'. இதில், ராஷ்மிகாமந்தனா, திரிப்திடிம்ரி, உபேந்திராலிமாயி, பூஷன் குமார் மற்றும் பிரணவ் ரெட்டி வங்கா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இந்த படம் ரூ.900 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை படைத்தது.

இந்த படத்தில், ரன்பீருக்கு அதிநவீன இயந்திர துப்பாக்கியின் சப்ளையராக இருந்த பிரெடி பாட்டீல் கதாபாத்திரத்தில் உபேந்திரா லிமாயி நடித்திருந்தார். இவர் தற்போது, தெலுங்கில் அறிமுகமாக உள்ளார்.

இயக்குனர் அனில் ரவிபுடி இயக்கும் இப்படத்தில், வெங்கடேஷ், மீனாட்சி சவுத்ரி மற்றும் ஐஸ்வர்யா ராஜேஷ் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். மேலும், ராஜேந்திர பிரசாத், சாய் குமார், நரேஷ் உள்ளிட்டோர் நடிக்கின்றனர்.

இதனையடுத்து உபேந்திரா லிமாயின் நடிப்பை இப்படத்தில் காண அவரது ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். தமிழில் உபேந்திரா லிமாயி, விஷால் நடிப்பில் வெளியான 'சிவப்பதிகாரம்' படத்தில் நடித்துள்ளார். மேலும், 'ஜோக்வா' என்னும் திரைப்படத்தின் மூலமாக சிறந்த நடிகருக்கான இந்திய தேசிய திரைப்பட விருதினை வென்றுள்ளார்.

## 'மைக்கேல் ஜாக்சன் கிட்டத்தட்ட 'எந்திரன்' படத்தில் பாட இருந்தார்' ஏ.ஆர்.ரகுமான்

ஷங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்து 2010ல் வெளியான எந்திரன் படம் பெரிய வெற்றி பெற்றது. இதில் வசீகரன், சிட்டி ஆகிய இரண்டு கதாபாத்திரங்களில் ரஜினிகாந்த் நடித்து இருந்தார். கதாநாயகியாக ஐஸ்வர்யா ராய் நடித்திருந்தார். இந்த படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருந்தார்.

இந்நிலையில், மைக்கேல் ஜாக்சன் கிட்டத்தட்ட 'எந்திரன்' படத்தில் பாட இருந்ததாக ஏ.ஆர்.ரகுமான் கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

'கடந்த 2009 ம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்சில் உள்ள மைக்கேல் ஜாக்சனின் வீட்டிற்கு சென்று அவரை சந்தித்தேன். மிகவும் அன்பானவர் அவர். அங்கு நாங்கள் இசை மற்றும் உலக அமைதி குறித்து பேசினோம். என்னை அவரது குழந்தைகளுடன் அறிமுகப்படுத்தினார்.

பின்னர் நான் இந்தியா திரும்பியதும் இயக்குனர் ஷங்கரை சந்தித்தேன். அப்போது அவர் எந்திரன் படத்தில் மைக்கேல் ஜாக்சன் பாடினால் எப்படி இருக்கும் என்றார். அதற்கு நான், அருமை அவர் தமிழில் பாடுவாரா? என்றேன்.

## பாரீஸ் ஒலிம்பிக்: தமிழகத்திற்கு பெருமை சேர்ப்பாரா துப்பாக்கி சுடுதல் வீரர் பிரித்வி ராஜ் தொண்டைமான்..?



பழங்கால கிரேக்கத்தில் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் ஆரம்பித்தது, ஒலிம்பிக் விளையாட்டு. அங்கு ஒலிம்பியா என்ற இடத்தில் ஜியஸ் கடவுளுக்கு மரியாதை செலுத்தும் ஒரு விழாவாக இது கொண்டாடப்பட்டது.

தற்போது 33வது ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் வரும் 26ந்தேதி கோலாகலமாக தொடங்குகிறது. இந்த போட்டிக்கு இந்தியா சார்பில் இதுவரை 124 பேர் தகுதி பெற்றுள்ளனர். இந்த தொடருக்கு இன்னும் 13 நாட்கள் மட்டுமே உள்ளதால் இதன் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களுக்கு தற்போதே அதிகரித்துள்ளது.

இதில் தமிழகத்தை சேர்ந்த துப்பாக்கி சுடுதல் வீரர் பிரித்விராஜ் தொண்டைமான் ஷாட்கன் பிரிவில் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். இவரது தலைமையில் ஒலிம்பிக் தொடருக்கான 5 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டது.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் இளவரசர் என்று அறியப்படும் பிரித்வி ராஜ் தொண்டைமான் டிராப் ஷூட்டர் பிரிவில் இந்தியாவிற்காக பல பதக்கங்களை வென்றுள்ளார். இவர் சீனாவின் ஹாங்சோவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்றுள்ளார்.

உலகக்கோப்பை ஷாட்கன் ஆடவர் டிராப் போட்டியில் வெண்கலப் பதக்கம் (இந்த போட்டியில் பதக்கம் வென்ற ஒரே இந்தியர் பிரித்விராஜ் தொண்டைமான்) வென்றுள்ளார். தற்போது, பாரீஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடுதல் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

பிரித்விராஜ் தொண்டைமான் ஏற்கனவே உலக துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ள நிலையில், நடப்பு ஒலிம்பிக் போட்டியில் சிறப்பான பங்களிப்பை வழங்கி பதக்கம் வென்று இந்தியாவிற்கு மட்டுமல்லாது தமிழகத்திற்கும் பெருமை சேர்ப்பாரா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் வாரியம் ஸ்பான்சர்களை ஈர்ப்பதில் சரியான வேலையைச் செய்யவில்லை பிரையன் லாரா



வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி தற்போது இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டி20 போட்டி கடந்த 10ம் தேதி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் தொடங்கியது . 1970களில் ஆரம்பித்து 1990 வரையில் உலகக் கிரிக்கெட்டில் வெஸ்ட் இண்டீஸ் மிகவும் பலமான ஒரு அணியாக இருந்தது. ஒரு நாள் கிரிக்கெட்டுக்கான முதல் இரண்டு உலகக் கோப்பைகளை கைப்பற்றிய வெஸ்ட் இண்டீஸ் அணி டி20 வடிவத்திலும் இரண்டு உலகக் கோப்பைகளை கைப்பற்றி இருக்கிறது. ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் அந்த அணி பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட்டை வளர்ப்பதற்காக உள்நாட்டு கிரிக்கெட் கட்டமைப்பை சிறந்த முறையில் கிரிக்கெட் வாரியம் உருவாக்கவில்லை. இது அந்த நாட்டு கிரிக்கெட்டை வெகுவாகப் பாதித்திருக்கிறது. இந்நிலையில் இது குறித்து வெஸ்ட் இண்டீஸ் அணியின் முன்னாள் வீரர் பிரையன் லாரா கூறியதாவது, வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட்டின் வங்கி கணக்கில் 100 மில்லியன் இல்லை 200 மில்லியன் பணத்தை முதலீடு செய்தால் வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் வளர்ந்து விடுமா? என்றால் எனக்குத் தெரியவில்லை. எங்கள் வீரர்கள் திறமையை பயன்படுத்தி விளையாடவில்லை. எங்களுடைய கிரிக்கெட் வாரியம் சரியான ஸ்பான்சர்களை ஈர்ப்பதில் தோல்வியடைந்து இருக்கிறது. அடித்தட்டில் இருந்து கிரிக்கெட்டை வளர்ப்பது, அகாடமி மற்றும் உள்நாட்டு கட்டமைப்பை மேம்படுத்துவது போன்றவை மிகவும் முக்கியமானது. இந்த விஷயத்தில் நாங்கள் பின்தங்கி இருக்கிறோம். நான் புதன்கிழமை காலை 7.30 மணிக்கு லார்ட்ஸ் மைதானத்தின் பக்கம் நடைபயிற்சி மேற்கொண்டேன். அப்போதே டெஸ்ட் கிரிக்கெட்டை பார்ப்பதற்காக மக்கள் வந்து காத்திருந்தார்கள். இதே போல நான் சிறுவனாக இருக்கும் பொழுது வெஸ்ட் இண்டீசில் உள்ள குயின்ஸ் பார்க்கில் காலை 5.30 மணிக்கே ரசிகர்கள் காத்திருப்பார்கள். ஆனால் இப்பொழுது 11.00 மணி ஆனால் கூட யாரும் வருவதில்லை மைதானம் காலியாக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.



## அனைத்து வித கிரிக்கெட்டிலும் தற்போது மிகச்சிறந்த பவுலர் இவர்தான் பிரட் லீ




அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்ற டி20 உலகக்கோப்பை தொடரில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. இந்த வெற்றியை இந்திய ரசிகர்கள் கோலாகலமாக கொண்டாடி வருகின்றனர். இந்த தொடருடன் ரோகித் சர்மா, விராட் கோலி, ரவீந்திர ஜடேஜா ஆகிய சீனியர் வீரர்கள் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தனர்.

இந்த தொடரில் சிறப்பாக பந்துவீசி இந்தியா சாம்பியன் பட்டம் வெல்ல அதிக அளவில் பங்காற்றிய ஜஸ்ப்ரித் பும்ராவுக்கு தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது. இந்த சூழ்நிலையில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ அனைத்து வித கிரிக்கெட்டிலும் தலைசிறந்த பந்துவீச்சாளரை தேர்ந்தெடுத்திருக்கிறார். இது தொடர்பாக அவர் கூறும்போது, தற்போது அனைத்து வித கிரிக்கெட்டிலும் உலகின் சிறந்த பவுலராக இருப்பது பும்ரா தான். பும்ரா ஒரு தனித்துவமான விதிவிலக்கான பந்துவீச்சாளர். அவர் புதிய பந்தை கொண்டு பந்து வீசும் போது வேகத்தை கூட்டி வீசுகிறார். போட்டிகளில் விளையாடும் போது அவரது செயல்திறன் மற்றும் சிறந்த தலைமைத்துவ திறன்கள் வெளிப்படுகின்றன. டி20 உலகக் கோப்பை தொடரில் அதிக ரன்கள் கொடுக்காமல் 15 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார். அவர் அபாரமான பவுலர். இந்த டி20 உலக கோப்பையை வெல்ல இந்திய அணி தகுதியானது. இந்திய அணியின் பேட்டிங் ஆர்டரை பார்த்தால் ஒவ்வொரு இடத்திலும் ஆதிக்கம் செலுத்தும் வீரர்கள் களமிறங்குகின்றனர். மிடில் ஆர்டர் வலுவாக உள்ளது. விரைந்து ரன் சேர்க்கும் அதிரடி ஆட்டக்காரர்களும் அணியில் உள்ளனர். இந்த பாராட்டுகளுக்கு எல்லாம் அவர்கள் பொருத்தமானவர்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## பாகிஸ்தான் கிரிக்கெட்டின் கிங் பாபர் அசாம்தான் ஹசன் அலி புகழாரம்

சமீபத்தில் முடிவடைந்த டி20 உலகக்கோப்பை தொடரில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது. இந்த தொடரில் பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி லீக் சுற்றுடன் வெளியேறியது. இந்தியா மற்றும் அமெரிக்காவிடம் தோல்வி அடைந்ததால் பாகிஸ்தான் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. சமீப காலங்களாகவே தடுமாறி வரும் அந்த அணி கடந்த வருடம் பாபர் அசாம் தலைமையில் 2023 ஆசிய மற்றும் உலகக்கோப்பையில் தோல்வியை சந்தித்தது. அந்த தோல்விகளுக்கு பொறுப்பேற்று தம்முடைய பதவியை ராஜினாமா செய்த பாபர் அசாம் மீண்டும் இந்த தொடரை முன்னிட்டு கேப்டனாக அறிவிக்கப்பட்டார். ஆனால் இந்த தொடரிலும் அவருடைய தலைமையில் சுமாராக விளையாடிய பாகிஸ்தான் லீக் சுற்றுடன் வெளியேறியது. அதனால் அவருடைய கேப்டன்ஷிப் மீது மீண்டும் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஏனெனில் பேட்டிங் துறையின் முதன்மை வீரராக போற்றப்படும் அவர் தொடர்ச்சியாக பெரிய ரன்களை எடுக்காமல் தோல்விக்குகாரணமாகஅமைந்துவருகிறார்.அந்தசூழ்நிலையில் பாபர் அசாம் பாகிஸ்தானின் கிங் என்று சமீபத்தில் பாராட்டிய சக வீரர் ஹசன் அலி தம்முடைய கேப்டனுக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். ஆனால் அதற்காக தம்மை பலரும் கடுமையாக திட்டியதாக ஹசன் அலி தற்போது வருத்தம் தெரிவித்துள்ளார். ஆனால் இப்போதும் பாபர் அசாம்தான் பாகிஸ்தானின் கிங் என்று அவர் கூறியுள்ளார். மேலும் விராட் கோலி, வில்லியம்சன், ஸ்மித், ஜோ ரூட் மட்டுமே இடம் வகித்த பேப் 4 வீரர்களை பாபர் அசாம் 5 வீரர்கள் கொண்ட பட்டியலாக மாற்றியதாகவும் புகழாரம் சூட்டியுள்ளார். இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு; "கிங் (பாபர் அசாம்) இதை செய்வார் என்று சொன்ன நாளிலிருந்து எனக்கு அதிகப்படியான விமர்சனங்கள் வருவதை நான் கவனித்தேன். பாபர் அசாம் என்னுடைய கிங். அவர் பாகிஸ்தான் கிரிக்கெட்டின் கிங். அவர் எப்போதும் கிங்காக இருப்பார். ஏனெனில் அவர் அந்தளவுக்கு தரமான பேட்ஸ்மேன். இதற்காக மீண்டும் என்னை பலரும் திட்டுவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவர் பாகிஸ்தானின் சிறந்த பேட்ஸ்மேன் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளார். கேப்டனாக இதுவரை அவர் பெரிய வெற்றிகளை பெற்றதில்லை. ஆனாலும் அவர் சிறந்தவர். அவர் பாகிஸ்தான் பேட்டிங் வரிசையின் கிங். இந்தியாவில் கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கோப்பையில் மட்டுமே அவர் சதமடிக்கவில்லை. மற்றபடி அனைத்து இடங்களிலும் அவர் அசத்தியுள்ளார். நீங்கள் பேப் 4 பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் தற்போது பாபர் அசாம் காரணமாக அது பேப் 5 ஆக மாறியுள்ளது. எனது கருத்தில் இப்போதும் நான் மாறாமல் இருக்கிறேன்" என்று கூறினார்.



அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்

**விளக்கம்:**
தம்மை வருத்துவோர்க்கும் தீய செயல்களைச் செய்யாமலிருத்தலை, அறிவு எல்லாவற்றிலும் தலையான அறிவு என்று கூறுவர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.